**செய்தி வெளியீடு எண்: 70** **நாள்: 23.10.2023**

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், திருச்சிராப்பள்ளி என்ஆர் ஐஏஎஸ் அகாடமியில் 23.10.2023 (இன்று) நடைபெற்ற மருது சகோதரர்கள் நினைவு விழாவில் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். அதன் சிறப்பம்சங்கள்:**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் திருச்சிராப்பள்ளி என்ஆர். ஐஏஎஸ் அகாடமியில் இன்று (23.10.2023) நடைபெற்ற மருது சகோதரர்கள் நினைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், இந்தியாவின் சுதந்திர உணர்வுக்குத் தீ மூட்டி ஜம்புதீவு பிரகடனத்திற்கு ஒரு கருத்தியல் கட்டமைப்பை வழங்கியவர்கள் என மாபெரும் மருது சகோதரர்களைப் பாராட்டினார். நமது தேச விடுதலைக்காக அசாத்தியமான தியாகங்களை செய்த தமிழ்நாட்டின் மாபெரும் வீரமிக்க சுதந்திர போராட்ட வீரர்கள் மருது சகோதரர்கள் என இருவரையும் ஆளுநர் போற்றினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டுக்கு ஆளுநராக தாம் வந்தபோது, மாநிலத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்களை பற்றி தாம் அறிய விரும்பியதை நினைவுகூர்ந்தார். அந்த பட்டியலில் வெகு சிலரே இருந்ததாகவும் மருது சகோதரர்கள் போன்ற சிறந்த தேசிய சுதந்திர போராளிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறினார். "எத்தனையோ சுதந்திர போராட்ட வீரர்களின் பெயர்கள் இருந்த வீரம் நிறைந்த பூமியில் வெகு சில சுதந்திர போராளிகள் மட்டுமே இருந்தது தனக்கு ஏமாற்றம் அளித்ததாக ஆளுநர் குறிப்பிட்டார். சுதந்திர போராட்ட வீரர்கள் தேசத்துக்காக மிக அதிகமாகவே கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றிய எனது ஆய்வைத் தொடர்ந்தபோது, பாரதத்தின் விடுதலைக்காக உயிரைக் கொடுத்த பல ஆயிரம் சுதந்திர வீரர்கள் இருப்பதை அறிந்தேன். ஆங்கிலேயர்களுக்கு எதிரான கிளர்ச்சியின் மையமாக விளங்கிய சிவகங்கை மாவட்டத்தில், 2012ம் ஆண்டில் நடந்த சட்டம்-ஒழுங்கு சீர்குலைவை காரணம் காட்டி, அக்டோபர் 23 முதல் 31 வரை கூட்டம் நடத்தக்கூடாது என சமீபத்தில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் மாவீரர்களையும் அவர்களின் தியாக தினங்களையும் கொண்டாடுவது தடைபடுகிறது," என்று ஆளுநர் குறிப்பிட்டார். இத்தகைய நிகழ்வுகளைக் கொண்டாடினால் அவற்றால் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துவிடக் கூடும் என்பதை அறிந்து தாம் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்ததாக அவர் கூறினார். "மாவட்ட நிர்வாகமும் அரசாங்கமும் பதற்றத்தைத் தீர்த்து கருத்து வேறுபாடு கொண்டவர்களை ஒன்றிணைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை கொண்டாட வேண்டும். அதற்குப் பதிலாக, 11 ஆண்டுகளுக்குப் பின்பும் ஏதேனும் மோதல்கள் ஏற்படும் என எதிர்பார்த்து, மாவீரர்களை கொண்டாடுவதும், அவர்களின் தியாகங்கள்

கொண்டாடப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளோ அவற்றின் தலைவர்களோ தங்களின் ஆண்டு நிகழ்வுகளை கொண்டாடியபோது சட்டம்-ஒழுங்கு சம்பவம் நடந்திருந்தால், அடுத்தடுத்த ஆண்டுகளில் அக்கொண்டாட்டங்களை தடை செய்திருப்பார்களா? தேசிய சுதந்திர வீரர்கள் என்று வரும்போது மட்டும் மருது சகோதரர்கள் என்றும், தேச விடுதலைக்காகப் போராடிய நேதாஜியுடன் இணைந்து பணியாற்றியவருமான முத்துராமலிங்க தேவர் ஆகியோரின் கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுகிறது.

நாட்டின் சுதந்திரத்துக்காக போராடியவர்களாகவும், ஜாதிகளுக்கு இடையே பாகுபாடு காட்டாதவர்களாகவும் இருந்த தலைவர்கள் ஜாதிய தலைவர்களாக மாறியிருப்பது தனக்கு வேதனை அளிக்கிறது என்று ஆளுநர் கவலை தெரிவித்தார்.

இந்த தேச சுதந்திர தியாகிகளை, அரசாங்கம் கொண்டாடியிருக்குமானால், மக்கள் அதில் பங்கெடுத்திருப்பார்கள். அந்த நிகழ்வுகளை மக்களின் நினைவிலிருந்து அழிக்க அரசு முயற்சிப்பதால், பள்ளி பாட புத்தகங்களில் இருந்து அவர்களைப் பற்றிய தகவல்கள் நீக்கப்பட்டுள்ளன. அவர்களின் அடையாளமும் பங்களிப்புகளும் எப்போதாவது நடக்கும் ஆண்டுவிழாக்களின் வடிவில் மட்டுமே கொண்டாடப்படுகின்றன. வெளிப்படையாக சொல்வதென்றால் அவை வாக்கு வங்கிக்காக நடக்கின்றன. ஆனால், அரசாங்கத்தாலும் அதிகாரத்தில் இருப்பவர்களாலும் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காததால் அந்த தலைவர்களை மக்கள் மறக்கத் தொடங்கினாலும் வழி, வழியாக வந்த அவர்களின் சமூகத்தினரால் அவர்கள் மறக்கப்படுவதில்லை. அதுமட்டுமின்றி, ஜாதிய அடிப்படையில் இங்கே பிளவுபட்ட ஒரு சமூகம் மோசமான நிலையில் இருக்கிறது என்று ஆளுநர் கூறினார்.

“இந்தியாவில் எந்த மாநிலத்திலும் மாணவர்கள் ஜாதி அடையாளத்தைக் குறிக்கும் கயிறு அணிந்து பள்ளிக்குச் செல்வதை நான் கண்டதில்லை. ஜாதிகளின் அடிப்படையில் சமூகம் துண்டாடப்பட்டு, தேச சுதந்திர வீரர்கள், ஆட்சியில் இருப்பவர்களால் மறக்கப்பட்டபோது, அவர்கள் சார்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் அந்த தலைவர்களை தங்களுக்கு மட்டுமே உரியவர்களாக சொந்தம் கொண்டாடிக் கொள்கின்றனர். இன்று நமது தேசிய தலைவர்கள் ஜாதிய தலைவர்களாக சிறுமைப்படுத்தப்பட்டு விட்டதால், ஆங்காங்கே பதற்றம் ஏற்படுகிறது. அந்த தலைவர்களின் நினைவுகள் ஏன் அழிக்கப்பட்டன? ஏனென்றால், இங்கு தேசிய சுதந்திர போராட்டத்தைப் பற்றிப் பேசும்போது பயமாக இருக்கிறது. ஆட்சியில் இருப்பவர்கள் தேசிய சுதந்திர இயக்கம் மற்றும் தேசிய சுதந்திர வீரர்கள் பற்றி பேச வெட்கப்படுகிறார்கள். அவர்களைப் பற்றி (தேசிய சுதந்திர இயக்கம் மற்றும் தேசிய சுதந்திர வீரர்கள்) பேசும் தருணத்தில், அவர்கள் (ஆட்சியில் உள்ளவர்கள்) தேசிய சுதந்திர இயக்கத்திற்கு எதிராக அக்காலத்தில் செயல்பட்டவர்கள் என்பதால் அவர்கள் அம்பலப்படுத்தப்படுகிறார்கள். இதனாலேயே தேசிய இயக்கத்தை தோற்கடிக்க அவர்கள் ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைப்பாக

இருந்தனர். இவை அனைத்தும் ஆவணத்தில் பதிவு செய்யப்பட்ட விஷயங்கள். அவர்கள் ஆங்கிலேயர்களின் ஏஜெண்டுகளாக இருந்தவர்கள். லண்டனில் பிரிட்டிஷ் வரலாற்று ஆவணப்பெட்டகத்தில் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு எதிராக போராடிய அந்த பிரிட்டிஷ் ஏஜெண்டுகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளனர். அவை - அந்த பிரிட்டிஷ் ஏஜெண்டுகள் யார், இங்கு போராடியவர்கள் யார், இன்று மக்களின் அடையாளமாக ஆட்சியில் இருப்பவர்கள் யார் என்பதை உணர்த்தும்.

கடந்த ஆண்டு, அக்டோபர் 2 ஆம் தேதி, மகாத்மா காந்தியின் பிறந்தநாளில், ஒரு சுவாரஸ்யமான விஷயம் நடந்தது: நான் மற்ற தலைவர்களுடன் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தச் சென்றன். பக்கத்தில், மகாத்மா காந்தி மற்றும் சுதந்திர போராட்ட வீரர்களின் பெரிய புகைப்பட கண்காட்சி இருந்தது. முழு கண்காட்சியிலும், திராவிட கருத்தியலை அடையாளப்படுத்தும் ஒரு புகைப்படம் ஒன்று கூட இருக்கவில்லை. அது அவர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. இந்த ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி, அந்த நிகழ்வில் புகைப்பட கண்காட்சி தர்மசங்கடத்தைத் தரும் என்பதால் அது இல்லாமல் ஆக்கப்பட்டது என்று ஆளுநர் கூறினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், மருது சகோதரர்கள் ஜாதிய தலைவர்களாக சிறுமைப்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது, மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சர்தார் படேல், ஷஹீத் பகத் சிங் போன்றவர்களும் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் கூட அவர்களும் ஒரு ஜாதிய தலைவர்களாகவே சுருங்க வைக்கப்பட்டிருப்பார்கள். இதை ஏற்க முடியாது என்று கூறினார்.

நம் நாட்டின் சுதந்திரத்துக்காக தங்கள் உயிரை கொடுத்து ரத்தம் சிந்தியவர்களை மறக்க முடியாது என்று கூறிய ஆளுநர், திருக்குறளின் 110வது குறளான நன்றியறிதலின் சிறப்பு பற்றி எடுத்துரைத்துார்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

என்ற குறளை விவரித்த ஆளுநர், நன்றியுணர்வை கொன்று விட்டு பிறருக்காக தன்னுயிரை ஈந்தவர்களை நன்றி கூராமல் மறுப்பவர்களுக்கு எந்த எதிர்காலமும் இருக்காது என்று குறிப்பிட்டார். அத்தகைய மிகப்பெரிய வீரர்களை மறப்பவர்கள் மீது திருவள்ளுவரின் சாபம் விழும் என்றும் ஆளுநர் கூறினார்.

இந்த மகத்தான இடத்தின் வரலாறை அழிக்க ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறிய மாண்புமிகு ஆளுநர், இந்த இடத்தின் இணையான வரலாற்றை இனப் பிளவு பற்றிய தவறான கதையை புனைய, திராவிடமும் ஆரியமும் தனித்தனி இனங்கள் என்று அழைத்தனர். திராவிட மொழியின் இலக்கணத்தை அளித்து, திராவிடமும் ஆரியரும் தனித்தனி இனம் என்ற கருத்தியலை உருவாக்க

முயன்றவர்தான் ராபர்ட் கால்டுவெல். அவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட இந்திய சாசனம், 1813ன்படி இந்தியாவில் சுவிசேஷத்தில் ஈடுபட்டு இந்தியாவின் கலாசாரம் மற்றும் ஆன்மிகத்தை அழிப்பதை கடமையாகக் கொண்டவர். மிஷனரிகளுடன் இங்கு வருவதற்கு அவர்கள் தன்னார்வலர்களை நியமித்தனர்; வேலை வாய்ப்புள்ள படித்தவர்கள் பலருக்கு அங்கேயே நல்ல வாய்ப்புகள் இருந்ததால் இங்கே வர விரும்பவில்லை. ஒருவேளை அவர்கள் இந்தியா வந்தாலும் கம்பெனி ஊழியர்களாக வந்தனர். பிற்காலத்தில் சிறந்த ஊதியம் பெறும் பிரிட்டிஷ் அரசு ஊழியர்களாக அவர்கள் வந்தனர். இதநால் பள்ளி இடைநிற்றல் மாணவர்களை அவர்கள் தேர்வு செய்தனர். அப்படி வந்தவர்களில் ஒருவர்தான் ராபர்ட் கால்டுவெல். அப்போது அவர் 17 வயதை கூட நிரம்பியிருக்கவில்லை. பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை, கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் சென்றதில்லை. அவர் இங்கு வந்து, காலப்போக்கில், எப்படியோ மொழிகளில் நிபுணத்துவம் பெற்றார். இந்த நாட்டை பிளவுபடுத்துவது ஆங்கிலேயர்களின் திட்டம். மேலும், தேசிய சுதந்திர இயக்கம் தொடங்கிய போது, அவர்கள் மிகவும் தீவிரமாக செயல்பட்டனர். அந்த நேரத்தில், அவர்கள் தேசிய சுதந்திர இயக்கத்தை தோற்கடிக்க உதவக்கூடிய ஒத்துழைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினர். இன்று இங்கு போற்றப்படும் இவர்களில் சிலர் அன்று லண்டனுக்குச் சென்று இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கக் கூடாது என்று மனுவை அளித்தவர்கள். வரலாற்றின் மறக்கப்பட்ட இந்த அத்தியாயங்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திர இயக்கம் நடைபெற்ற காலம் முழுவதும் அவர்கள் இந்த ஆரிய திராவிடம் மற்றும் பிளவை ஏற்படுத்தி ஆரிய மற்றும் வடக்கு ஆதிக்கம் பற்றி கட்டமைத்து சுதந்திர எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்கினர்.

சிறந்த ஆன்மிக தலைவர்கள், மகான்கள், ஞானிகள் மற்றும் வீரர்களின் தெய்வீக பூமியாக விளங்கிய தமிழ்நாட்டை வரையறுக்கும் அமைப்புகளை அவர்கள் அழிக்கத் தொடங்கினர் என்று கூறிய ஆளுநர், தமிழ்நாட்டின் சிறப்பை விவரிக்கும் **மகாகவி பாரதியார் பாடலில்** வரும் வரியான **'வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர் வீரம் செறிந்த தமிழ்நாடு' - இதுவே தமிழ்நாடு** என்று குறிப்பிட்டார்.

1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதியை கருப்பு நாளாக கடைப்பிடித்தவர்கள், நமது தேச கதாநாயகர்களை எப்படி எதிர்கொள்வார்கள்? அதனால்தான் தேசிய சுதந்திர இயக்கம் மற்றும் தேசிய சுதந்திர வீரர்களை பற்றி பேசுவதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களை சிறுமைப்படுத்த முயன்றனர். ஒரு சடங்கு போல அவர்களின் தினங்களை கொண்டாடுகிறார்கள். நமது சுதந்திர வீரர்களை காக்கும் உணர்வை நாம் பராமரிக்க வேண்டும். மக்கள் நன்றியற்றவர்களாக இருக்க முடியாது; நாம் கண்ணியத்துடனும், கருணையுடனும், நிமிர்ந்த தலையுடனும் முன்னேற வேண்டுமானால், நமது புகழ்பெற்ற கடந்த காலத்தை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

மருது சகோதரர்கள் முழு பாரதத்தின் விடுதலைக்கான கருத்தியல் கட்டமைப்புக்குள் வருவதை கற்பனை செய்து பாருங்கள்; ஆங்கிலேயர்களை கவலை கொள்ளும் அளவுக்கு அவர் ஒரு வலிமையான அணியை உருவாக்கினர்; அந்த கூட்டு தங்களை நாட்டை விட்டே விரட்டி விடும் என்று அவர்களுக்குத் தெரியும்; அதனால்தான் மருது சகோதரர்களை பகிரங்கமாக பிடிப்பதற்கும் அவர்களை மக்கள் முன்னிலையில் கொல்வதற்கும் தங்களின் முழு பலத்தையும் அவர்கள் பயன்படுத்தினர். அன்றைய தினம் சுமார் 533 பேர் தூக்கிலிடப்பட்டனர், அவர்களின் தலைகள் ஒரு கம்பத்தில் தொங்கவிடப்பட்டு, மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் காட்சிக்காக வைக்கப்பட்டன. இங்குள்ள மக்கள் துணிச்சல் மிக்கவர்கள். அவர்கள் மனம் சோர்வடையவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1806 இல், வேலூர் எழுச்சி நடந்தது. ஆங்கிலேயர்கள் பெரிய படைகளுடன் வந்ததால் ஏறக்குறைய ஆயிரம் இந்திய வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நமது சுதந்திர போராட்ட வீரர்கள் படைத்த இந்த வரலாறுகள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், திராவிட சித்தாந்தங்களின் ஒருசில தலைவர்களை மையமாகக் கொண்ட ஆய்வறிக்கைக்கு எவ்வாறு முனைவர் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் விளக்கினார். நான் பிஎச்டி ஆய்வறிக்கைகளை பார்வையிடச் சென்றபோது, அவை பிரசார பதிவுகளாக, சரியான ஆராய்ச்சி கூட செய்யப்படாதவையாக இருந்தன. பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக வேலை பெறுவதற்கான உரிமம் போல அவை இருந்தன. உயர்கல்வி நிறுவனங்களில் இத்தகைய தீவிர அரசியலமயத்தை காண்பது அரிது. அந்த ஆய்வறிக்கைகளில் ஒன்று கூட மருது சகோதரர்கள் பற்றி இல்லை. நமது மாபெரும் சுதந்திர போராட்ட வீரர்களின் வாழ்க்கை மற்றும் காலங்கள் குறித்த ஆராய்ச்சியை பார்க்க நான் விரும்புகிறேன். அவர்களின் வாழ்க்கையும் காலமும் ஆங்கிலேயர்கள் நம் சமூகத்திற்கு இழைத்த கொடுமைகளின் பிரதிபலிப்பாகும். மலேசியா, ஃபிஜி போன்ற நாடுகளுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறைய பேர் ஒப்பந்த அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். அந்த வரலாறுகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் திரு. விஜயாலயன், இயக்குநர், என்.ஆர். ஐஏஎஸ் அகாடமி, திரு. குருசாமி மயில்வாகனன், எழுத்தாளர், திரு. கற்பூரசுந்தர பாண்டியன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு), திரு. மாரி சேர்வை, எழுத்தாளர், திருமதி. ராதா தேவர், மதுசூதன பெருமாள், ஜம்புதீவு பிரகடன ஒருங்கிணைப்புக் குழு, மருது சகோதரர்களின் வம்சாவளியினர், மருது நினைவிட பங்களிப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

……………………………………………………………………………..…………………………

………………………………….

**ராஜ் பவன் சென்னை-22** **வெளியீடு/ xx**

**நாள்: 23.10.2023** **மக்கள் தொடர்பு அலுவலகம்**